செந்தமிழ்

தொகுதி சுக	திருவள்ளுவர் ஆண்டு 1996	பகுதி சு
Vol. 61	November 1965	No. 6

உலக மொழிகளில் பால் பகுப்பு

Dr. ச. அகத்தியலிங்கம்,
M. A. Ph. D. (Kerala) Ph. D. (Ind. U. S. A.)

அண்ணமலைப் பல்கலைக்கழகம்.

0. இயற்கைப் பால்பகுப்பும் இலக்கணப் பால் பகுப்பும்.
1. உயிர்திணையும் உயிரல்திணையும்
2. மனித இனம். உயிர்திணை, உயிரல்திணை
3. பெண்பாலும் பிறபால்களும்
4. ஆண்பாலும் பிறபால்களும்
5. ஆண்பாலும் பெண்பாலும்
6. ஆண்பால், பெண்பால், பொதுப்பால்
7. வகைப்பாடு
8. பால்வேற்றுமை இல்லாமை
9. மூவிடப் பெயர்களில் பால் பகுப்பு
10. ஒருமை, பன்மையில் பால் பகுப்பு
11. பெயரடை, பொது, சிறப்புச்சுட்டுகள், வினைகளில் பால் பகுப்பு

12. பால் காட்டும் விதங்கள்
13. பால்காட்டும் சொற்களின் பொருள்
14. மொழிகளில் மாற்றம்

---

0. 1. உலகில் காணப்படும் மொழிகள் பலவற்றில் பால்பகுப்பு இருப்பதைக் காணலாம். இவ்வாறு பால்காட்டும் மொழிகளின் பண்பினை எடுத்துநோக்கின் பல வேறு உண்மைகள் வெளியாகும். மொழிகளில் காணப்படும் பால்பகுப்பிற்கும் இயற்கை பால்பகுப்பிற்கும் (grammatical gender, natural gender) இடையே வேற்றுமை உண்டு. மனித இனத்திலும் விலங்கினத்திலும் இன்னும் இவைபோன்ற பிற உயிர்வாழ் இனங்களிலும் ஆண், பெண் பகுப்பினைக் காண்கிறோம். மனித இனத்திற்கும் பிற உயிர்வாழ் இனங்கட்கும் வேற்றுமை உண்டு. அஃறிணைப் பொருட்கள் பலவற்றில் ஆண், பெண் வேற்றுமையினைக் காணமுடியாது. இத்தகைய இயற்கைப் பால் பகுப்பினை ஒட்டிதான் இலக்கணப் பால்பகுப்புகள் அமைந்துள்ளன எனக் கூறமுடியாது. திராவிட மொழியினம், தற்காலப் பெர்சியன், ஆங்கிலம் போன்ற ஒரு சில மொழிகளில் காணப்படும் பால் பகுப்பு இயற்கைப் பால்பகுப்புடன் ஓரளவு பொருந்தியுள்ளது. தமிழில் ஆணைக் குறிக்கும் சொல் ஆண் பாலாகவும் பெண்ணைக் குறிக்கும் சொல் பெண்பாலாகவும், கை, கால் போன்று ஆண், பெண் பகுப்பின்றிக் காணப்படும் சொற்கள் அஃறிணையாகவும் இருத்தல் காணலாம். எனினும் விலங்கினத்தில் காணப்படும் ஆண்பெண்வேற்றுமை தமிழ் மொழியின் இலக்கணத்தில் குறிப்பிடப்படுவதில்லை. உயர் திணையில் ஆண், பெண்களைக் குறிப்பிடும் சொற்கள் மட்டுமே ஆண், பெண் பாலாகவிருப்பதும் பிறபொருட்களைச் சுட்டும் சொற்கள் அனைத்தும் அஃறிணையாகக் கருதப்படுவதும் இவண் குறிப்பிடத்தக்கன.

0. 2. ஆனால் லத்தீன் போன்ற மொழிகளின் தன்மைவேறு. பெண்களைச்சுட்டும் பெயர்கள் மட்டுமின்றி (femina = பெண்) விண்மீன் (stella) போன்ற ஆண், பெண் வேற்றுமைபற்ற பொருட்களைச் சுட்டும் பெயர்களுள் பலவும் பெண்பாலாக இருப்பதும் இதுபோன்றே ஆண்களைக் குறிக்கும் சொற்கள் (vir = மனிதன்) மட்டுமல்லாமல் ஆறு (fluvius) போன்ற சொற்களும் ஆண்பாலில் அடங்கியிருப்பதும் தமிழ்மொழியிலிருந்து லத்தீன் மொழிப் பால் பகுப்பு வேறுபட்டிருப்பதைக்காட்டும். இன்னும் நகர் (oppidum) போன்ற பல சொற்கள் பொதுப்பாலாகவும் உள்ளன. லத்தீன் மொழியும் தமிழ் மொழிபோன்று மூன்று பால்களைக் கொண்டுள்ள போதிலும் இப்பகுப்பு வேறுவேறாக இருத்தல் காணலாம். இத்தகைய வேறுபாடுகள் பல உலக மொழிகள் பலவற்றிலும் காணப்படுகின்றன. ஜெர்மன் மொழியில் பெண்ணைக் குறிக்கும் சொல் (weib) பொதுப் பாலைச் சார்ந்தது. லத்தீன், கிரேக்க மொழிகளில் ஞாயிற்றைக் குறிக்கும்சொற்கள் ஆண்பாலாகவும் திங்களைக்குறிக்கும் சொற்கள் பெண்பாலாகவும் இருக்க, ஜெர்மன் லித்துவேனியன் மொழிகளில் நேர்மாறாகஉள்ளன. இதுபோன்று வடமொழியில் ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்கள் வேறு வேறு பால் பகுப்பினைக்கொண்டிருக்கக் காணலாம்

0. 3. உலக மொழிகளில் காணப்படும் பால்பகுப்பினை எடுத்து நோக்கின் இலக்கணப் பால் பகுப்பிற்கும் (grammatical gender) இயற்கைப் பால் பகுப்பிற்கும் உள்ள வேற்றுமைகள் நன்கு தெரியவரும். இதற்குக் காரணம் இலக்கணப் பால் பகுப்பு மொழிகளின் அமைப்பைப் (strucrure of the language) பொறுத்து அமைவதுதான்.

0. 4. தமிழ் மொழியில் உள்ள பால் பிரிவினையை

எடுத்துப்பார்த்தால் இவ்வுண்மை புலப்படும். தமிழ் இலக்கணநூலோர் பெயர்ச்சொற்களை உயர்திணை, அஃறிணை என்றும் உயர்திணையை ஆண், பெண், பலர் பால் என்றும் அஃறிணையை, ஒன்றன் பால், பலவின்பால் என்றும் பகுத்துள்ளனர். இவற்றுள் எண் பகுப்பும் அடங்கியுள்ளது. வெறும் பால் பகுப்பினை மட்டும் அடிப்படையாகக் கொண்டால் தமிழ்ப் பெயர்களை ஆண், பெண், அஃறிணை என மூன்று வகையாகப் பிரிக்கலாம். இத்தகைய பிரிப்புக்குக் காரணம் தமிழ் மொழி அமைப்பே அன்றி வேறு எதுவும் இல்லை

0. 5. மொழிகளில் காணப்படும் இலக்கணக் கூறுகளின் (grammatical catesories) வகைப்பாடுகள் (classification) முக்கியமாக இரண்டு காரணங்களால் அமைக்கப்படுகின்றன. சொற்களினிடையே காணும் சில பண்புகளாலும் (morpholosial contrast) தொடரியலில் (syntaetical) காணும் சில பண்புகளாலுமே பெயர்களும், வினைகளும், பெயரடைகளும் இவை போன்ற பல இலக்கணக் கூறுகளும் வகை செய்யப்படுகின்றன. முதல் பிரிவுக்கு எடுத்துக் காட்டாகத்தமிழிலுள்ள அண்மை, சேய்மை, (இடைநிலைச்) சுட்டுகளைக் கூறலாம். அவன், இவன், என்ற சொற்கள் தொடரியலைப் பொறுத்த மட்டில் ஒரே பண்பினைக்கொண்டிருந்தாலும் (அவன் வந்தான்; இவன் வந்தான்)சொல் அடிப்படையில் ஒன்று சேய்மைப் பொருளையும் மற்றொன்று அண்மைப்பொருளையும் குறிப்பதால் பண்டைத் தமிழ்இலக்கணநூலோர் சுட்டினை மூன்றுவகையாகப் பிரித்தனர். இதுபோன்றே தன்மைப்பன்மையிலும் உளப்பாட்டுத்தன்மைப் பன்மை (inclusive) வேறுபாட்டுத் தன்மைப் பன்மை (exclusive) எனப் பாகுபடுத்திக்காட்டினர்.

0. 6. அவன், அவள், அது போன்ற சொற்

களில்—ன், —ள், —து ஒட்டுகள் முறையே ஆண், பெண், அஃறிணை பால்களைக் காட்டி நிற்பது காணலாம். எனவே தமிழில் காணப்படும் பால் பகுப்பும் சொல்லியல் அடிப்படையில்தான் அமைந்துள்ளது எனக் கூறுதல் பொருந்துமாயினும் பல சொற்களில் இவ்வேற்றுமை காணுதிருப்பது இவண் கவனித்தற்பாலது. மீனுட்சி, காமாட்சி, போன்ற பெயர்கள் ஆண், பெண் பால்களுக்குப் பொதுவாக இருப்பதும் 'சாத்தன்' என்ற சொல் உயர்திணை அஃறிணையில் வருவதும் இன்னேரன்ன பல காரணங்களால் வெறும் சொல்லியலை மட்டும் அடிப்படையாகக்கொண்டுதான் தமிழில் பால் பாகுபாடு ஏற்பட்டுள்ளது எனக் கூறுதல் இயலாது. இத்தகைய ஒரு நிலை ஏற்பட்ட காரணத்தால்தான் சில ஆசிரியர்கள் தமிழில் பால் பகுப்புப் பொருளை அடிப்படையாகக்கொண்டு ஏற்பட்டது எனக் கூறிப் போந்தனர். *

0. 7. ஆனுல் தமிழ் தொடரியலை எடுத்து நோக்கின் தமிழ் மொழியின் அமைப்பின் அடிப்படையில்தான் இப் பாகுபாடு ஏற்பட்டுள்ளது என்ற உண்மை விளங்கும்.

---

* Hence it is evident that gender and number are not taken as separate entities in Tamil language and that pal or the gender and number in Tamil nouns are deter-mined from their meaning than from their ending though it is generally stated that the ending n denoted masculine singular, l feminine singular, r, mar epicene plural.

P. S. Subramania Sastri, History of Grammatical Theories in Tamil, p. 108.

தமிழ் வாக்கியங்களில் காணப்படும் எழுவாய்—பயனிலை தொடர் ஒற்றுமை (Concord) தான் இப்பாகுபாட்டுக்கு முக்கிய காரணம். வினைமுற்று வினையாலணையும் பெயர்களில் இத்தன்மை விளங்கும். எந்தெந்தப் பெயர்கள் ஆண்பால் விகுதியினை ஏற்கின்றன, எப் பெயர்கள் பெண்பால் விகுதியினை ஏற்கின்றன என்றெல்லாம் கூறவேண்டின் பெயர்களை நிச்சயமாக ஆண், பெண்பால் சொற்களாகப்பிரித்துத்தான் ஆகவேண்டும். "அவர்கள்" "அவர்கள் வந்தார்கள்" என்பன போன்றவை இல்லாதிருப்பின் உயர்திணை என்ற பாகுபாடு அவசியமற்றதாகியிருக்கும். "சாத்தன் வந்தான்", "சாத்தன் வந்தது" என ஒரே பெயர் இரு வினைமுற்றுகளைக் கொண்டு ஆண், அஃறிணைப் பால்களைக் காட்டி நிற்பதால்தான் சாத்தன் என்ற சொல்லை (இலக்கண அடிப்படையில்) ஆண்பாலாகவும் அஃறிணையாகவும் கருதுகிறோம்.

0. 8. அஃறிணைப் பெயர்களை எடுத்து நோக்கினும் இவ்வுண்மை நன்கு விளங்கும் களிறு, பிடி, சேவல், பெடை போன்றஅஃறிணைப் பெயர்களில் தமிழ் இலக்கண நூலோர் ஆண், பெண் வேற்றுமை காண்பதில்லை. காரணம் தமிழர்கள் இவற்றில் ஆண், பெண் வேற்றுமையைக் கவனித்தார்கள் இல்லை என்பதன்று. ஆயின், இன்று, பிடி போன்ற சொற்கள் பிறந்திருக்காது. இத்தகைய பிரிவினை தமிழ் மொழியின் அமைப்புக்கு அவசியமில்லை சேவலாயினும், பெடையாயினும் 'வந்தது' என்ற பயனிலையை இட்டே கூறுகிறோம். வேறு வேறு விகுதி ஏற்று வருமாயின் நிச்சயமாக அஃறிணையிலும் ஆண், பெண் வேற்றுமையைப் புகுத்தியிருப்போம். எனவே தமிழ் மொழியின் பால் பாகுபாடு 'பொருளை அடிப்படையாகக் கொண்டதன்று;' இம்மொழி

யின் அமைப்பின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது' என்ற உண்மை விளங்கும்.

0. 9. மலையாள மொழியில் வினைமுற்று ஆண், பெண், அஃறிணை பால் பகுப்பினைக் காட்டவில்லையாயினும் வினையாலணையும் பெயரில் இப்பகுப்பு காணப்படுவதும் அவன், அவள், அது என்ற சொற்களில் முப்பால் பகுப்பு காணப்படுவதும் 'அவன் இராமன்; அவள் ஓமனே' என்பன போன்ற வாக்கியங்கள் பால் தொடர் ஒற்றுமை இருப்பதும் கவனித்தற்பாலன. மேலும் பெயர்களை மூவிடப் பெயர்களால் குறிப்பிட வேண்டின் (கண்ணன் வந்தான் என்பதை அவன் வந்தான் என்பது போன்று) எந்தெந்த இடங்களில் 'அவன்' இட்டுப் பேசுவது எவ்விடங்களில் அவள், அல்லது அது இட்டுப் பேசுவது எனக் கூறவேண்டி வரும். இந் நிலையில் பெயர்களை ஆண், பெண், அஃறிணை பால்களாகப் பிரிக்கவேண்டிய நிலை ஏற்படும் இந்நிலைமை ஆங்கில மொழி பால் பிரிவிற்கும் பொருந்தும்.

0. 10. இன்னும் சில மொழிகளில் பெயர்களுடன் வரும் சிறப்பு, பொதுச் சுட்டுகளுக்கேற்பவும் (**Definite and indefinite articles**) பெயர்ச்சொற்கள் பிரிக்கப்படுவதைக் காணலாம்; எடுத்துக் காட்டாக ஸ்பானிஷ் மொழியில் **'el'** என்ற சிறப்புச் சுட்டினை ஏற்று வருவன ஆண்பாலாகவும் **'la'** என்ற சிறப்புச் சுட்டினை எடுப்பவை பெண்பாலாகவும் இருத்தல் காணலாம். இவண் ஆண்களையும், கம்பு, புத்தகம் போன்றவற்றையும் குறிப்பன ஆண்பாலாகவும் பெண்கள், பசு, மேசை போன்றவற்றைக் குறிப்பன பெண்பாலாகவும் உள்ளன.

el hombre = the man
el libro = the book
el palo = the stick
la muger = the woman
la casa = the house
la mesa = the table

இதே நிலையினை ருமேனியன், போர்த்துகீஸ் போன்ற மொழிகளிலும் காணலாம். ருமேனியனில் இச் சிறப்புச் சுட்டுக்கள் தனிச் சொல்லாக இராமல் பெயருடன் இணைந்து பின்னொட்டாக வருதல் காணத்தக்கது.

pui — l = the chicken (ஆண்பால்)
ap — a = the water (பெண்பால்)

0. 11. உலக மொழிகள் அனைத்தையும் எடுத்து நோக்கின் பால் பகுப்பு பல மாதிரியாக அமைந்திருத்தல் காணலாம். சில மொழிகள் எவ்வித பாலையும் காட்டுவதில்லை. இம்மொழிகளில் சொற்கள் சந்தர்ப்பத்திற் கேற்பவே ஆண் பெண் பால்களைக் காட்டும்.

1. 0. பலமொழிகளில் பெயர்கள் உயிர்திணை (animate) உயிரல்திணை (inanimate) என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாகத் தாய்லாந்தில் பேசப்படும் தாய் மொழியையும் அமெரிக்க இந்திய மொழிகளில் ஒன்றான பாக்ஸ் (Fox) போன்ற பல மொழிகளையும் குறிப்பிடலாம். இவ்வாறு உயிர்திணை, உயிரல்திணை என இரு பிரிவுகளைக் கொண்டு காணப்படும் மொழிகள் தம்முள்ளும் பல வேற்றுமைகள் காணக்கிடக்கின்றன.

1. 1. தாய் மொழியில் காணப்படும் உயிரல்திணைச் சொற்கள் எவ்வித பால்பகுப்பையும் காட்டுவதில்லை. ஆனால் உயிர்திணைச் சொற்களோ ஆண் பெண் வேற்றுமை காட்டும். தாய் ஒரு ஓரசை மொழியானதால் பெயர்ச் சொற்களின் முன்போ அன்றிப் பின்போ வரும் சில சொற்களின் உதவியால் ஆண் பெண் வேற்றுமையைக் காட்டுகின்றனர்.

தெக் சை = பையன்
தெக் யிங் = பெண்
பொர் க்ரோஅ = சமையல்காரன்
மா க்ரோஅ = சமையல்காரி

(தொடரும்)

செந்தமிழ் இதழில் புத்தகங்களுக்கு மதிப்புரை வழங்கப்படுவது யாவரும் அறிந்ததே. மதிப்புரை விரும்புவோர் தங்கள் புத்தகங்களில் இரண்டுபிரதிகளை அனுப்பி வைக்கவேண்டும். மதிப்புரை இடப்படும் புத்தகங்கள் தமிழ்ச்சங்கப் ''பாண்டியன் நூலகத்தில்'' சேர்க்கப் பெறும்.

பொறுப்பாசிரியர்.

நந்தா விளக்கு

ஓரங்க நாடகம்:

தி. வேலவன்,
திருவனந்தை.

(சென்ற இதழ் 124- ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாறன்:- பிறிதொன்றுமன்று. பாரியின் புகழை எண்ணி வியந்தோம்... நன்று... அமர்தி பெரும!

கபிலன்:-(அமர்ந்தவாறு)...புகலற்கோ உரியது அவன் புகழ்! மீனவ. மண்ணகத்து அப்புகழ்பெறல் அரிது. வரையறையின்றி வாரி வழங்கும் வளளல் அவன். விருந்து காணின் களிப்புறுவர் அவன் மக்கள். சுனையும் பொழிலும் காவும் நிறைந்து மக்கள் நாடுவன வெல்லாம் தேடாது கொடுக்கும் வாடா வளமையது பறம்பு. நன்னிலம், நற்குடி செம்முடி இவையன்றிச் சீரியது எவை வேண்டும்?

மாறன்:—...நும் கூற்று......? மெய்...மெய்போலும்! ஆயின் அவன் உள்ளத்தால் பொய்யாது ஒழுகும் வள்ளலென்பதில் ஐயப்பாடுடையேன்!...அதில் உறுதியு மில்லேன்.

கபி: நம்பற்கியலாதன அவன் இயல்புகள். நம்நாட்டினர் நிலை வேறு. அவன் மக்கள் நிலைவேறு. அவர் மேம்பாடுமிக்கவர். பறம்பை அடையின் விரிந்தநோக்கும் பரந்தபண்பும் வருமே!

[மாங்குடி மருதன் வருகின்றனன்]

மாங்குடி மருதன்: வாழி! மன்னவ!... (கபிலனை நோக்கி) பறம்பு நாடு சென்று என்று மீண்டீர்!

கபி: மீண்டுவந்து நாட்கள் நான்காயினவே!

மாங்: முல்லைக்குப் பாரி தேரீந்த செய்தி அறிவீரோ?

மாற: என்ன?

கபி: அறியேனே!......விளங்கக்கூறும்!

மாங்: செழுங்குறிஞ்சியும் மணமுல்லையும் கண்டுகளிக்க நேற்று முன்னாள் மாலை பரிசேர் தனித் தேர் செலுத்திச் சென்றனன். மலர் பல அரும்ப பற்றும் துணையின்றித் தளர்நடை பயிலும் சேய்போல் முல்லைக்கொடி யொன்று மென்காற்றில் அசையக் கண்டனன். அருகில் சென்றனன் அய்யனே என்னை அள்ளி எடுத்துக்கொள் எனத் தளிர்கை நீட்டின போலும், யாது நினைத்தனனோ? நெஞ்சம் நெகிழ்ந்தது மாவின்கட்டவிழ்த்து மணித் தேரை மலர்க்கொடியிடம் விடுத்து அரும்புமலர்ப் பூங் கொடி அதன்மேல் பரப்பிக் களிகூர்ந்தனன். மாவேறி மனை வந்தடைந்தனன். இது செய்தி.

மாற: இதை யான் எண்ணவும் இயலாதுள்ளேனே!

கபி: ஓருயிர்க்குறிப்பறிந்து பாரியன்றி எவரால் உதவ இயலும்? நின்னால் அவ்வழி எண்ணல் அரிது. அவன் நெஞ்சம் வேறு. நின் நெஞ்சம் வேறு. பல்லுயிரும் அவன் அறிகுவன். பல்லு யிரும் அவனை அறியும். அவன்சிறப்பியல்பு அது. குன்றின் மேலிடும் நந்தா விளக்கன்றோ அவன் புகழ்!... யான்சென்று மீள்வேன்!

மாற: நன்று... [கபிலன் செல்கின்றனன்]

மாங்: யானும் சென்று வருகுவல்...!

மாற: நன்று ..நன்று (மாங்குடிமருதன் செல்கின்றனன்)
....முல்லைக்குத் தேரீந்தானாம்! அறிவிலி! முல்லைக்கு ஏன் தேர்!சிறுகொம்பு போதாதோ? அதையும் கேட்டுப் புலவோர் வியக்கின்றனர். அவனன்றி வள்ளல் எவர் என்று சாற்றுகின் றனர்.

அருந்திறல்: ஏன்...நம்...கபிலரும் போற்றுகின்றனரே!

மாற: இதைப் போற்றாமல் எதைப் போற்றுவார்? அது புலவர்

தொழில்.
குன்றின்மேலிட்ட நந்தா விளக்கு. அவன் புகழ் நந்தா விளக்கு... நந்தா விளக்கு... செழியன் சீருக்கோர் எதிர்ப்பு. மீனவனிலும் மேம்பட்டவன் வாழ்வதோ? மாறன் புகழுக்கு மறைவா? தென்னவனிற் சிறந்த மன்னவன்! கூடாது...... ஒருகாலும் இம்மண்ணகத்து வாழ்தல் கூடாது. நந்தாவிளக்கு அதுகுன்றல் வேண்டும். அதன் ஒளி மறையவேண்டும். நம் புகழ்ச் சுடர் அங்கு ஓங்கவேண்டும். பறம்போன்...செம்மல் ...ஏந்தல்...அண்ணல்... வள்ளலென்பன கேட்டல் கூடாது என் நாட்டுவேளிர்! என்னிற் சிறப்புறுவதோ! அதுஇழுக்கு... அது ஒழிக்கப்படல்வேண்டும்.

2.

அன்பு

[பிற்பகல். பாரியின் அரண்மனை. இரவலர்பலர் கூடிநிற்கின்றனர். பொன்னும் பட்டும் குவிக்கப்பட்டிருக்கின்றன. அவர்க்கு அள்ளிக் கொடுக்கிறான் பாரி. கபிலனும் இரவலர் நடுவண் நிற்கின்றனன்.]

பாரிவேள்: நல்லிசைப் புலமையோரே! அயர்வெய்தினும் உயர் வெய்தினும், துயர்படினும் நிலைமாறினும் தமிழ் தம் உயிர் என வாழும் நும்மனோர்க்கு யானிக்கைமாறு செய்ய என் தவம் செய்தேனோ? இது என் பேறு. இன்பத் தமிழிசைத்து நெஞ்சத்துயர் போக்கி அன்புதனை ஊக்கும் அருந்தமிழ்ப் பாவலோரே! நும் பனுவல் மாண்புறுக! செய்யுள் சீர்பெறுக. அவை நெஞ்சத்து நலம் காத்து மேம்படுக.

[கபிலனைக்கண்ட பாரிவேள் அவனண்டைவிரைந்துவருகின்றான்]
...யார்!...தெள்ளுதமிழ் துள்ளு நாவோய் வருகை கூறாமல் வந்ததேன்! பெரும! மாசறு மொழித்தாயின் ஆருயிர் மைந்தன் என்று வருவானோ என்று ஆவைப் பிரிந்த கன்றுபோல் யான் அல்லலுற்ற நாட்கள் எத்தனை? இன்று காணுவதே

என்பேறு. களைப்புடன் தோன்றுகின்றீர்! அமர்க. எவ்வழிப் போந்தீர்!

கபி: கான்வழிச் சென்ற தேர்வலவன் என்னைக் கண்டு நின் கடி நகர் வாயில் விடுத்துச் சென்றனன். களைப்பொன்றும் யானறியேனே!

பாரி: மகிழ்ச்சி... நீவிரும் இப்பொருளை வாரி வழங்கலாமன்றே.

கபி: நன்று... நீயும் கொடு யானும் கொடுப்பேன்.

[இருவரும் வாரி வழங்கிய பொருள் பெற்ற இரவலர் சென்றனர்]

......செல்வியரெங்கே!

பாரி: குன்றிடை மகிழ்ந்தாடச் சென்றிருப்பர். இம்முறை நீவிர் எம் நாட்டில் நெடுநாள் தங்கல் வேண்டும்.

கபி: தமிழறி புலவனென அன்றெனக்குச் சீர் செய்தனை. அன்றே என்னுயிரையும் நின் மண்ணகம் சிறை வைத்தனை இன்று உடன் பிறந்தோன்போல் உறவு கொள்கின்றனை. எதை எண்ணுவேன்! தென்னவன் பேரவை என் உயிரனையது ஆயுள் அத்தனையும் நின் கையகம் அடக்கிக் கொண்டனை. எழிலும் வளனும் ஏற்றமும் மிக்கது கூடல்மூதூர்......ஆயினென்ன? உன் தலைமைச் சிற்றூர் என் உள்ளத்தையே பற்றிக் கொண்டது. பறம்புக்குப் பாரி போதாது போலும். கபிலனையும் கவர்ந்து கொண்டது.

பாரி: அதில் வியப்பொன்று மின்றே!

[பணியாள் ஒருவன் வருகின்றனன்]

பணியாளன்: வாழி! மன்னவ! செழியர் படைஞன் ஒருவன் வந்துளன்.

பாரி: உடன் ஈண்டு கொணர்தி!

[பணியாளன் சென்று படைஞனோடு வருகின்றான்.

படைஞன் கையில் முடங்கலிருக்கிறது.]

படை: பறம்பின் கோவே! வணக்கம். எம் மன்னவர் மாறன் முடங்கலிது. மறுமொழியும் உடன் பெற்று மீளவந்தேன்.

பாரி: நன்று... [படைஞன் முடங்கலைக் கொடுக்கிறனன். பாரி பெறுகின்றனன். கை காட்டிப் படைஞனை இருக்கையில் அமரச் செய்தான். ஓலையை விரித்தான். அவன் கண்கள் கனன்றன.]

"எம் வீரம் பண்பு புகழ் இவற்றை உலகு அறியும். நும் மங்கையர் இருவரையும் எம்மனைவியராக அளித்து எம் அன்பைப் பெறுக. இவ்வுறவால் இருவரும் உய்வோம்."

...பழையன்மாறன்.

புலவர் பெரும!... இம்முடங்கலை நோக்குமின்!

[கபிலன் வாங்கிக் காண்கின்றான்]

கபி: பழையன் மாறனோ இவ்வாறு வரைந்துளன்.. ஈதென்ன முறையற்ற விழைவு.....அரசி நலமுடன் உளள்.

பாரி: பெரும! மாறனுக்கு அது முறையற்றதன்று போலும். அவன் அரசியை உலகறியும்...ஆயின் இவ்விழைவு... எம் மகளிரை அவன் ஆசைக் கிழத்தியர் வரிசையில் சேர்க்கும் துணிவு.

ஆவின் கன்றெனின் பழுதெண்ணுதிருக்குமோ புலி? நன்று. படைஞ! பாரி இச் செயலுக்கு உடன்படான். பொருள் படை புகழ் நினைந்து, அஞ்சித் தன் மங்கையரை எவருக்கும் மனைவியராக்க இசையாதவன் பறம்போன். நின் மன்னவர்க்கு இதைச் சாற்றுதி!

கபி: நன்று பகன்றனை! நீ அடிமையன்று...... உடனே ஓலை விடுதி!

3.
தீமை

[காலை. செழியன் அரண்மனை. படைஞனிடம் ஆவலோடு கேட்கின்றனன் பழையன் மாறன். அவன் கையில் மாற்றோலை உளது]

பழையன்மாறன்: நன்று பகன்றனை...... புலவரும் அவ்வாறு கூறினர்.

படைஞன்: ஆம்..இறைவ..... [பழையன் ஓலையை விரிக்கின்றனன். கண்கள் விரிகின்றன]

பழை: மாற!...வாழி யான் குரிசில் என் பொருளும் வலியும்சிறிது என் நெஞ்சம் சிறிதன்று. அது குன்றாது. குறுகாது. என் மங்கையர் நின் அரியணை யமரும் தகுதிபெற்றிலர். யாங்கனம் அவரை நினக்குக் கிழத்தியராக்குவேன்? அவரை நின் கிழத்தியராக்க என் நெஞ்சு விழையாது.

"பாரிவேள்"

நின் கிழத்தியராக்க என் நெஞ்சு விழையாது!...நெஞ்சு விழையாது...!! விழையாது...!!! என்ன இறுமாப்பு! கானகப்பயனும் கருங்கடல் முத்தும் ஈழத்துறவும் காழகத்தாக்கமும் பெற்ற என்னையும் என் குடியையும் பழிக்க எவ்வளவு துணிவு? புகழுடையோம். பெரும் பொற்புடையோம். அரும் செல்வியருடையோம் என்ற செருக்கோ? அவன் செருக்கை சிதைத்தாலன்றி என் நெஞ்சு அமைதியுறாது. கைகட்டி,வாய் புதைத்து என் முன் திறைகொட்டி நிற்பவன், என்னை எதிர்ப்பதோ? என் ஆண்மை மறந்தனனோ? செழியன் சீற்றம் அறியானோ?

படைஞ, தானைத் தலைவனையும் அமைச்சரையும் அழைத்துவருதி!

படை: நன்று ..வேந்தே! [படைஞன் செல்கிறான்]

மாற: எய்த அம்பால் எய்தவனேயே வீழ்த்தல் வேண்டும்... ஆம்! ...அவன் முடங்கல் ஆம்! அதுவே அவனை வீழ்த்த வழி செய்துளது எரிகதிர்முன் இருளோ?... இமைப்பொழுதுபோதாது அச்சிறு வேளிரை அடக்க. [அமைச்சன் அழும்பில்வேள் வருகிறான்]

அழும்பில்வேள்: வாழி வேந்தே!... எவரை அடக்க மன்னவ?

[மாறன் ஓலையை அவனிடம் கொடுக்கிறான். அவன் பிரித்துப் பார்க்கிறான்.]

மாற: அவனைத்தான்...பறம்புமலைக்கோமானை ..பாரிவேளை ...பாரி வேள்...என் வாள் வாய்சிக்குண்டு மடியவேண்டும்.

அழும்: பாரி தவறு கூறிலனே! மெய்மொழிக்கோ சினம்? மாவேந் தர்க்கொல்லுமோ மயக்குறு சினம்?

மாற: அமைச்சே...அவன் கூற்று தக்கது என்பீரோ? நும் சொற் கேட்க அழைத்திலேன். வேந்தனிடும் வினைசெயற்கு அழைத் தேன்...பாரியின் படைத்திறன் எத்தகையது?

அரும்: பாரியின் படை சிறிது. வலி பெரிது. வெற்றி என்றோர் வினையுமுண்டு என்பதை நாம் காணாது செய்யவும் வல்லது. அவருள் ஒருவனுக்கு எதிர்நிற்க நம்முள் பதின்மர் வேண்டும். மீனவன் என்னுவது போல் சிறியோனல்லன் பாரி! அடிக்கும் கோலுக்கும் அஞ்சாத அரவன்னவன்.

நீருள் முதலை வெல்லும். யானை தோற்கும். பறம்பில் அவன் வெல்வான். மாற்றார் தோற்பர். நமக்குத் திறமையிருப்ப வனென எள்ளன்மின். அறத்துக்கு அஞ்சுநன். நேர்மை நெஞ்சினன். வீரத்தின் எழில் உரு. வண்மையின்குன்று அவனோடு அமர் கொள்ளன்மின்! அமரில் அவனை வெல்லல் கனவே! ஆகலின் நெறிபிறழும். அவம் சேரும்.

மாற: போதும்... போதும்... எவனை... எங்கு .. எவ்வாறு எப் போழ்து வெல்ல இயலும் என்பதை யானறிவேன்... நீவிர்... செல்க.

அழும்: சினம் மீனவன் கண்களை மறைக்கின்றது. சீற்றம் அவன் நெஞ்சை வஞ்சிக்கிறது. பொருமை அவன் புகழுக்கு பகை தேடுகிறது... காலம் கற்பிக்கும்... யான் வருகுவல்!...

[அழும்பில்வேள் செல்கிறுர்]

மாற: காலம் கற்பிக்கும்... எடுத்ததற் கெல்லாம் இடையூறு செய்வதோ அமைச்சுத் தொழில்?

[அருந்திறலும் சோழமன்னனுன நெடுங்கிள்ளியும் சேரமன்னனுன குட்டுவஞ் சேரலும் வருகின்றனர்]

அருந்: அரசே!... வானவனும் வளவனும் நம் வளமனைவந்துளர் காண்மின்!...

மாற: ...(வியந்து)...வருக! வருக! ஏந்தல்காள்! ஓலையின்றி வேல்தாங்கும் படையின்றி, குடையின்றி என் திருவோலக்கம் நீவிர் வரல் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி! மெய்ம்மையில் பேரதிர்ச்சி! நும் இருவரையும் ஒருங்கு கண்டு... ஒருநொடிப் போழ்து இவ்வுலகையே மறந்தேன்... விந்தையிலும் விந்தையாயுளது நும் வரவு. சிறப்புறுக! தானைத்தலைவ! நம் நண்பர்க்கு... அன்பர்க்கு வேண்டும் விருந்து நல் பண்டம் உடன் ஆக்குக!

[சிறிது நினைந்த மீனவன்]... சிறிது பொறுமின்... விரைந்து வருகுவல்! [அடுத்த அறைக்கு மாறனும் தானைத் தலைவனும் செல்கின்றனர். மாறன் உடல் வியர்கிபிறது]

தானைத்தலைவ! இவர் நம்மனைக்கு ஏன் வந்தனர். அவர் வந்த நோக்கம் அறிந்திலையோ?

அருந்: வேந்தே! என் பதட்டம். நும் ஆண்மை எங்கே! அறிவின் ஆற்றலெங்கே! திறனெங்கே!... படைகொண்டு வந்திலர் .. நம்குடைகொள்ள எண்ணிலர்... அவர்நடை சொல்லுமே!... அவர் நெஞ்சும் கலங்கியுள்ளது.

மாற: நன்று... நன்று... வியப்பாகவுளதே! விருந்து சிறப்பாக அமைதல் வேண்டும் .. விரைந்துதிரும்புதி!

(முன் காட்சி)

குட்டுவஞ்சேரல்: காவிரி நாட நின்போல் யானும் பாரி மகளிரை வேண்டினேன். மறுத்தான். வெறுத்தேன்.

[பழையன் மாறன் வருகின்றனன்]

பழை: இவ்விடையீடு நேர்ந்தமைக்குப் பொருத்தருளுமின்!.. நும் வரவு யாது பற்றியதோ?

நெடுங்கிள்ளி: கொழுநீரிலஞ்சியும் கோங்கும் சாந்தும் ஓங்கும் காட்டில் புள்ளிமான் துள்ளித்திரிகிறது. அதன் வளனும் இசையும் வனப்பும் கண்டு வேங்கை பெற விழையாதோ? பெற விழைந்து துணை நாடி......

மாற: என்னைக் காணவந்தீர்!

குட்டு: முகில் முழங்க...மலர் அலர பொழில் நடுவண் எழில்மயில் நடமிடுகிறது. கண்டோர் காமுறுவர். அதன் வனப்பு கேட்டோர் மருள்வர். விரைந்து காணச் செல்வர். தன்சிறப்பில் இறுமாந்து...என் கூர்வாய் அம்பின் வலிமறந்து பீலிதரமறுக்கிறது. மயக்கும் மயில் கேட்பின் கொடுக்குமோ? ..வலிந்தே பெறல்வேண்டும்...அதற்குத் துணைதேடியே ஈண்டுவந்தேன்.

மாற: ஆயின்......... [அருந்திறல் வருகின்றனன்]

அருந்: வேங்கையின் பாய்ச்சல் தவறும்...அம்பின் குறியும்தவறும் ஆயின் மீன் வைத்த குறி பிழைபடுமோ?... அதுவும் பாரி யென்று பெயர் படைத்தால்... பிழையென்பதுண்டோ?

மாற: பாரியைச் செருமுகத்தில் காணவோ துணை நாடி வந்தீர். எவர் வருவார் துணை என்று காத்திருந்தேனே! வந்தவேளை நல்லவேளை. இன்றே போருக்கு வேண்டுவன செய்வோம். படை திரட்டுவோம். மூவரும் ஒருங்குசேர்ந்தே பறம்போனை ஒரு பகலில் வெல்லல் வேண்டும். பொன்னிருந்தென்...அன்னவன் புகழ் வேண்டாவோ? இன்றைக்குப் பத்தாவதுநாள் பறம்பின் மடியில் மூவர் படையும் கூடல் வேண்டும்.

சேரனும் சோழனும்: ஆம்... அதுவே அவனை வெல்லும் வழி! யாம் சென்று வருவோம்!... [இருவரும் எழுகின்றனர்]

மாற: விருந்து அருந்துமின்!...இருந்து செல்லலாம். என் தோள் தினவெடுக்கிறது. அவன் திறன் காணலாம்...சிலநாட்கள் ... பின்...பாரி!...அவனை யார் காண்பர்!

(வளரும்)

தொல்காப்பியம்-சொல்லதிகாரம்

—○—

சேனவரையர் உரை

எளிமையாக்கம்:

வித்துவான்.

நா. இராமையாபிள்ளை எம். ஏ.

சூத். 19: இயற்கைப் பொருளை இற்று எனக் கிளத்தல்.

இள் இயற்கை பொருளை = தன்னியல்பில் திரியாது நின்றபொருளை; அதன் இயல்பு கூறுங்கால் ஆக்கமும் காரணமும் கொடாது; இற்று எனக் கிளத்தல் = இற்று எனச் சொல்லுக.

உதா:-கலம் வலிது; நீர் தண்ணிது; தீ வெய்து; வளி உளரும்; உயிர் உணரும்.

இயல்பு என்பது பொருட்குப் பின்தோன்றாது உடன் நிகழும் தன்மை.

இற்று என்பது குறிப்பு வினைமுற்று. கிளத்தல் என்பது வியங்கோள். உதாரணங்களில் வரும் "உளரும்" "உணரும்" என்னும் தெரிநிலை வினைமுற்றுக்களும் இற்று என்னும் பொருள்பட நிற்றலின், இற்று எனக் கிளத்தலேயாம்.

தடை: நிலம் வலியதாயிற்று இத்தொடரில் நிலம் என்னும் இயற்கைப் பொருள், ஆயிற்று என்னும் ஆக்கச் சொல் பெற்று வருகிதே.

விடை: இயல்பாக இருந்த நிலத்தைக் கல்லும் இட்டிகையும் (செங்கலும்) போட்டுக் குற்றுச் செய்துக் கெட்

டிப்படுத்திடல், அதனை "நிலம் வலியதாயிற்று" என்று ஆக்கச்சொல் கொடுத்துக் கூறுவது வழக்கம். அதில் தவறு ஏதுமில்லை. அது செயற்கைப் பொருளேயாகும். இயற்கைப் பொருளில்லை.

இனி, நீர் நிலத்தையும் சேற்று நிலத்தையும் மிதித்துச் சென்ற ஒருவன், வன்னிலத்தை மிதித்தபோது "நிலம் வலியதாயிற்று" என்று சொன்னால், அங்கே ஆயிற்று என்னும் ஆக்கச்சொல் நிலத்தின் திரிபு குறியாது நிலத்தின் வேறுபாடு குறித்து நிற்கும். ஆகவே அங்கேயும் இயற்கைப் பொருள் ஆக்கமொடு வந்ததில்லை என்க. எனவே இவ்வாறு வருவதும் தவறில்லை.

ஆக்கம் என்பது ஒருபொருள் தன் இயற்கை நிலை திரிந்து வேறு நிலையடைவதாகும்.

இவ்வாறு உணராது, நிலத்திற்கு வன்மை இயற்கையன்று, செயற்கை என்று கருதி ஒருவன் "நிலம் வலிதாயிற்று" என்று சொன்னால், அவன் கூற்று, "திங்கள் சூரியது" என்பார் கூற்றுப்போல ஒன்றை மற்றொன்றால் உணர்ந்தார் கூற்றாகும். அது ஆராயப்படாது தள்ளப்படும்.

சூத். 20. செயற்கை பொருளை ஆக்கமொடு கூறல்.

இள். செயற்கை பொருளை = காரணத்தால் தன் தன்மை திரிந்த பொருளை, அத்திரிபு கூறுங்கால்; ஆக்கமொடு கூறல் = ஆக்கம் கொடுத்துச் சொல்லுக.

ஆக்கமொடு கூறல் என்பதனால் திரிபு கூறுதல் பெற்றாம் ஏனென்றால் செயற்கைப் பொருளின் கண் அல்லது ஆக்கம் வாராது.

இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் என்பன பண்புத்தொகை.

சூத்: 21. ஆக்கம்தானே காரணமுற்றே.

இதன்: ஆக்கம்தானே காரணமுதற்றே = செயற்கை பொருளை ஆக்கமொடு கூறுங்கால், காரணத்தை முதலிற் கூறி, பின்பே ஆக்கம் கூறவேண்டும்.

உதா: 1. கடு (மூலிகை) கலந்த கைபிழி எண்ணெய் பெற்றமையின் மயிர் நல்ல ஆயின.

2. எருப்பெய்து இளங்களை கட்டு நீர் கால்யாத்தமையால் பைங்கூழ் நல்ல ஆயின.

3. நீர் கலத்தலால் நிலம் மெலியதாயிற்று.

4. தீச் சார்தலால் நீர் வெய்தலாயிற்று.

தடை:- மயிர் நல்ல, பயிர் நல்ல—எனச் செயற்கைப் பொருள் ஆக்கம் பெறுது வந்தனவே.

விடை:- அந்நன்மை பொருளோடு தோன்றின் இயற்கையேயாம். அவ்வாறின்றி முன் தீயவாய் இருந்து பின் நல்ல ஆயின வேனும், தீய நிலைமை காணுதான் "மயிர் நல்ல" "பயிர் நல்ல" என்று சொன்னல் குற்றமில்லை. செயற்கையால் ஆவதை உணர்ந்துதான் ஆக்கமில்லாது சொன்னல் குற்றமாம். தொடர்ந்துபயிர் செழிப்பாயிருப்பின். ஆக்கம்கொடாமலே "பயிர் செழிப்பாய் இருக்கிறது" என்று சொல்வது முறை. எரு முதலியவற்ருல் செழிப்பாக்கப்படுமாயின் "பயிர் செழிப்பாயிற்று" என்று ஆக்கங் கொடுத்தே சொல்ல வேண்டும்.

தடை:- செயற்கைப் பொருளை ஆக்கமும் காரணமும் கொடுத்துச் சொல்லுக என்பதே கருத்தானல் சூத்திரம் ஒன்ருய் இருக்கவேண்டுமே.

விடை:- அவ்வாறு சொன்னால், ஆக்கமும் காரணமும் செயற்கைப் பொருட்கண் ஒத்தனவாயின என்பது பட்டு காரணமில்லாமலும் ஆக்கச் சொல் வரும் என்னும் அடுத்த சூத்திரத்தின் கொள்கையோடு மாறுபடும். காரணம் செயற்கைப் பொருளுக்கு வேண்டியதா? ஆக்கச் சொல்லுக்கு வேண்டியதா? என்ற ஐயம் தோன்றும். அதனாலேயே "ஆக்கந்தானே காரணமுதற்றே" எனத் தனிச் சூத்திரம் செய்தார்.

இயற்கைப் பொருள் ஆக்கமும் காரணமும் பெறாது வரும். செயற்கைப் பொருள் ஆக்கமும் காரணமும் பெற்று வரும். இவ்வாறு வருதலே இலக்கணம். இவ்வாறன்றி வருதல் மரபுவழு.

நுண்ணுணர்வுடையார்க்கு இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள்களை எவ்வாறு கூறுதல் வேண்டும் என்பது விளங்கும் ஏனென்றால் "தம்மரபினது" என்ற தொல்—சொல்—11வது சூத்திரத் தொடர் விளக்கி நிற்கும். ஆனால் ஏனையுணர் வினார்க்கு இவ்வேறுபாடு உணர முடியாது ஆகவே இதை விரித்துக் கூறினார் என்க.

சூத்: 22 ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்போக் கின்று என்ப வழக்கினுள்ளே.

இள். வழக்கினுள் = உலக வழக்கில்; ஆக்கக் கிளவி = காரணத்தை முதலில் கொண்டே வரும் என்று சொல்லப்பட்ட ஆக்கச் சொல்; காரணம் இன்றியும் வரும். என்று இலக்கண ஆசிரியர் சொல்லுவர்.

உதா: மயிர் நல்லவாயின பயிர் நல்ல வாயின.

ஆக்கக் கிளவி வழக்கினுள் காரணம் இன்றியும் வரும். எனவே செய்யுளுள் காரணம் பெற்றே வரும்.

உதா: (1) பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும் குரிசில் வலிய வாகுகநின் தாள்தோய் தடக்கை.

(2) குருதி படிந்துண்ட காகம் உருவிழந்து குக்கிற் புறத்த சிரல்வாய

(3) கருமுருகன் சூடிய கண்ணி—திருநுதால்! இன்று என் குரல் கூந்தற் பெய்தமையால் பண்டைத்தன் சாயல வாயின தோள்.

இவை காரணம் பெற்று வந்தவாறு கண்டுகொள்க.

'குக்கிற் (குங்கிலியம்) புறத்த, சிரல்வாய'' என ஆக்கமின்றி வந்தனவேயெனின் 'தொகுக்கும் வழித்தொகுத்தல்' என்பதனுல் அங்கே ஆக்கம் தொக்கு நின்றதென்க

தடை: செயற்கைப் பொருள் செய்யுளுள் காரணம் பெற்றே வரவேண்டியனவை காரணம் இன்றிவந்தன

உதா: (1) அரியகானம் சென்ருேர்க்கு எளியவாகிய

(2) நல்லவையெல்லாம் தீயவாம் தீயவும் நல்லதாம் செல்வம் செயற்கு.

விடை: முதல் உதாரணத்திற்கு, களவுக் காலத்து அரியனவாகிய தோள்கள் இக்காலத்து எளியனவாயின என்பது கருத்தாகலான் இக்காலம் காரணம் என்பது பெறப்படும்.

இரண்டாவது உதாரணத்திற்கு, ஊழால் என்பது அதிகாரத்தான் வருதலான் அது காரணம் என்பது பெறப்படும்.

மேலே சொல்லப்பட்ட இரண்டும் காரணத்தோடேயே வந்தன என்க. காரணமின்றி வந்தன எனப்பட்டா.

கடலும் புணையும்

ந. வி. செயராமன் எம். ஏ.,

விரிவுரையாளர்,
தமிழ் ஆராய்ச்சித்துறை
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

உவமையிலாக் கலைஞானமும் உணர்வரிய மெய்ஞானமுமாகிய பதியை அடையவேண்டிய உயிர், பாசத்தால் ஈர்க்கப்பட்டு, பிறவி என்னும் பெருங்கடலில் கிடந்து உழல்கிறது. பிறவி என்னும் கடலில் துன்பம் அலைகளாக வந்து உயிரை அலைக்கழிக்கின்றது. பற்றுக்கோல் இன்றி அலமந்து கிடக்கும் உயிருக்கு மாதர் என்னும் காற்றும் துயர் தருகின்றது. காமம் என்ற சுறா மீன்கள் இடையிடையே அல்லற்படுத்துகின்றன. இத்தகைய துன்பங்களால் சூழப்பட்ட உயிருக்கு அக்கடலின்றும் கரையேற புணையொன்று கிடைத்தால் எவ்வளவு நன்மை தரும்? துன்பக் கடலில் தடுமாறும் உயிர்க்கு உதவும் புணையொன்றை மாணிக்கவாசகர் காட்டுகின்றார். காதலாகிக் கசிந்துகண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்குய்க்கும் திருவைந்தெழுத்தே அப்புணையாகும். அப்புணையைக் கொண்டார், அல்லற் கடலினின்றும் கரையேற இயலும் இவ்வுண்மையை உணர்ந்த மணிவாசகர்,

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு, பற்றென் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்

டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந் தமில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே"

என்று பாடுகின்றார். மேலும்.

அணை ஆர் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லிக் கொய்யாமோ

என்றும் புகழ்ந்து பாடுகின்றார் புணையாக அமைந்த அப் பேரருளானையே புணையாளன் என்ற பெயரால் சுட்டிப் புகழ்ந்துரைக்கின்றார்.

பிறவியைப் பெருங்கடலாகவும் நான்என்னும் அகப் பற்றைத் துன்பந்தரும் மகரமாகவும், இருவினைகளை அலைக் கழிக்கும் அலைகளாகவும், மங்கையரைச் சண்டமாருதச்சுழ லாகவும் உருவகித்து, இத்தகைய துயர்க்கடலில் நிலை கெட்டு மதிமதிங்கிக் கிடக்கும் தன்னை முத்தியாங் கரை சேரக் கருணை காட்டுமாறு, தன்சித்தமிசை குடிகொண்ட தெய்வத்தை உள்ளுருகி வேண்டுகின்றார் தாயுமானவர். அல்லற்கடலினின்றும் மல்லற் கரையேற்றுமாறு அல்லல் தீர்க்கும் அருமருந்தாகிய இறைவனை இறைஞ்சும் இப் பாடலில், இறைவனைப் புணையாளனாக எண்ணுந்திறத்தைக் காண்கிறோம்.

பிறவியாகிய கடலை, வெய்தாய வினைக்கடல் என்றும், பிறவிப் படுகடல் என்றும், அல்லற் கடல் என்றும், இடர்க் கடல் என்றும் தேவார ஆசிரியர்கள் பலவாறு சுட்டியுள்ள னர் பிறவிக்கடலில் துயருறும்உயிர்கள்மீது இறைவன் தன் பெருங் கருணைத் திறத்தால் இரங்கி அவை கடைத்தேற அருள்புரி கின்றான். இவ்வுண்மையை

"வெய்தாய வினைக்கடலில் தடுமாறு முயிர்க்கு மிக
இரங்கி அருள்புரிந்து வீடுபேருக்கம் பெய்தானை...!"

என வரும் அடிகளால் உணரலாம். இறைவனை,

"பந்தித்த வல்வினைப் பற்றறப் பிறவிப்படுகடல்
பரப்புத் தவிர்வான்"

என்றும்,

'அல்லற்கடல் நின்றும் ஏறவாங்கி,
நெறிதான் இதுஎன்று காட்டினனை'

என்றும். அவன் உயிர்கட்கு அருள்புரியும் எளிமையைத் தேவார ஆசிரியர்கள் நாவாரப் பாடுகின்றனர்.

மேலும் துன்பமாகிய பிறவிக்கடலுள் சுழிக்கப்பட்டு இளைக்கின்ற உயிர்களைக் காக்கும் தோணி என்றும் இறைவன் சுட்டப்படுகின்முன்.

"இடர்க்கடலுட் சுழிக்கப்பட்டிங் கிளைக்கின்றேற்கு
அக்கரைக்கே ஏறவாங்கும் தோணியை"

என்பது அப்பர் வாக்கு.

பிறவியைப் பெருங் கடலாகவும், கடலைக் கடக்கும் நாவாயாக அறத்னதயும் குறிப்பிட்டு,

"பிறவியென்னும் பெருங்கடல் விடுஉம்
அறவி நாவாய்"

என்று மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்,

"ஆழ்கடற் புணையினன்ன அறிவரண் சரணடைந்தான்"

என்ற சிந்தாமணியுள்ளும்,

"நீப்பரும் பிறவிநீர்க் கடலைநீந்துநற்
றேப்பையாம் திருவுரு"

என்ற மேருமந்தரப் புராணத்துள்ளும் கூட, பிறவி பெருங் கடலாகவும், அறிவன் பாதங்கள் புணையாகவும் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

திருவள்ளுவப் பெருமானும் இக்கருத்தையே கூறியுள்ளார்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்."

என்ற குறளில் பிறவியைப் பெருங்கடலாக உருவகித்து, இறைவனடியைப் புணையாகக் கொண்டவரே அதனை நீந்த இயலும் என்ற கருத்து கூறப்பட்டுள்ளது அறியத்தக்கது. இப்பாடலில் இறைவனடி என்பதற்கு 'இறைவனடி என்னும் புணையை' என்று பொருள் கூறி, 'காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின் 'பிறவிப் பெருங் கட' லென்றார் என்றும் பரிமேலழகர் உரை விளக்கம் வரைந்துள்ளதும் அறியத் தக்கதாகும்.

பிறவிக் கடலில் தடுமாறும் உயிர்கட்கே இறைவனடி புணையாக விளங்குமென்றால் சாதாரணக் கடலில் வீழ்ந்துழல்வார்க்கு இறைவனடி புணையாக விளங்குந் தன்மையைக் கூறவும் வேண்டுமா? 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று முழங்கிய நாவுக்கரசருடைய வாழ்வில் இந்த நிகழ்ச்சியைக் காண்கிறோம்.

அலகில் கலைத்துறை தழைக்கவும் அருந்தவத்தோர் நெறிவாழவும் அவதாரம் செய்தவர் அப்பர் பெருமான். அழலார் வண்ணத்து அம்மானை அன்பில் அணைத்து, காராண்ட மழை போலக் கண்ணீர் சொரிந்து, இறைவனின் பொருள்சேர் புகழினைப் போற்றித் துதித்துப் பேறு பெற்றவர் அப்பர் பெருமான். திலகவதியாரைச் சார்ந்து திருவாளன் பெருவாழ்வு பெற்ற திருநாவுக்கரசருக்கு அமண் குண்டர்கள் இழைத்த தீச்செயல்கள் பல. நீற்ற

றையிலிட்டும், தீவிடப் பாங்குடைய அடிசில் தந்தும் தூய ருருத அப்பரை, கல்லுடன் பிணித்துக் கடலில் தள்ளினர். அப்பர் கட்டப்பட்ட கல் கடலிடை ஒரு மிதவையாக மிதந் தது. இறைவன் திருவடிகளை எண்ணி, திருவைந்தெழுத்தை ஓதி அப்பர் கரை ஏறினர். அமண் குண்டர்களின் தீச் செய லால் கடலில் தள்ளப்பட்ட அப்பருக்கு, அதனின்றும் மீண்டு கரையேற திருவைந்தெழுத்துத் துணையாக அமைந் தது. திருவைந்தெழுத்தை ஓதி, கடலினின்றும் கரை யேறிய இக்காட்சியை,

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

என்றும்,

கல்லினே டெனைப்பூட்டி அமண்கையர்
ஒல்லைநீர் புகநூக்க என்வாக்கினல்
நெல்லுநீள் வயல்நீலக் குடியரன்
நல்லநாமம் நவிற்றி உயர்ந்தே னன்றே.

என்றும் அப்பரே பாடுகின்றூர்.

இறைவனின் திருநாமம் கூறிவழுத்திய அளவில், கல்லுடன் பிணிக்கப்பட்டு கடலிடைத் தள்ளப்பட்ட பிரக லாத ஆழ்வாரும், கடலிடை மிதந்து கரையேறி உய்ந்தார் என்பது கம்பராமாயணம். ஆழ்வார் பிணிக்கப்பட்ட கல் கடலிடையே ஒரு குடுவைபோல மிதந்த அற்புதக் காட்சியை

'நடுவொக்குந் தனி நாயக ஞமம்
விடுகிற் கின்றில ஞகலின் வேலை
மடுவொத் தங்கதின் வங்கமு மன்றுய்க்
குடுவைத் தன்மைய தாயது குன்றமே.'

என்று கம்பரும் கவினுறப் பாடியுள்ளார்.

(தொடரும்)

சமயம்:

111.	சித்தி விநாயகர் தோத்திரப் பாமாலை	திருவண்ணநாதக் கவிராசர்
112.	உபநிடதம் தமிழ் மொழிபெயர்ப்பு	—
113.	சேக்கிழார் சுவாமிகள் பிள்ளைத் தமிழ்	மீனாட்சிசுந்தரம் பிள்ளை
114.	திருத்தணிகைப் பிள்ளைத் தமிழ்	வ. சு. செங்கல்வராய பிள்ளை
115.	கந்தபுராண தத்துவம்	த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
116.	துகளறு போதம்	சீகாழிச் சிற்றம்பல நாடிகள்
117.	ஆதிசங்கரர் அன்புமாலை	நீ. சண்முகானந்த சுவாமி
118.	புஷ்பவனம் பக்தி வாசம்	இ. ஆர். இராஜகோபாலாச்சாரி
119.	சோமசுந்தரேசுவரப் பாமாலை	சுத்தப்பிரமானந்த சுவாமி
120	கந்தரந்தாதி மூலமும்—உரையும்	அருணகிரிநாதர்
121.	தேவி உபநிஷத் தீபிகை	மொழி. பெ.நா. இராமநாத சாஸ்திரி
122.	வடதிருமுல்லை வாயிலந்தாதி	மாதவச் சிவஞான முனிவர்
123.	விசுவநாதர் கோவிற் திருப்பணி முறையீடு	சிதம்பரச் செட்டியார்
124.	தமிழர்தொழு வேதாந்த வாசிரியன்	ப. ஆ. ரெ. திருமலை அய்யங்கார்
125.	கட்டளைத் திரட்டு	பூவை. கல்யாணசுந்தர யதீந்தரர்
126.	யஜ்ஞஸம்ரக்ஷிணி.	கோபாலதேசிகாசார்யர்

127.	திருக்கோவையார்	மாணிக்கவாசகசுவாமிகள்
128.	ஒழிவிலொடுக்கம்	சீகாழிகண்ணுடைய வள்ளல்
129.	பெருந்திரட்டு	தத்துவராயர் தொகுப்பு
130.	தமிழ்நாடும் நம்மாழ்வாரும்	திரு. வி. க.
131.	திருவரங்கக் கலம்பகம் உரையுடன்	பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்
132.	மதவிருக்ஷம்	நரசிம்மலு நாயுடு அவர்கள்
133.	விஷ்ணு ஸகஸ்ரநாம பாஷ்யம்	மொ. பெ. இராமானுஜாசாரியர்
134.	வன்னியர் புராணம் மூலமும்—உரையும்	கி. வீரப்பிள்ளை
135.	கம்பராமாயண வசனம். அயோத்தியா காண்டம்	கம்பர்
136.	ஸ்தல. யாத்திரைப் பொதுவிதி	ஆறுமுக சுவாமிகள்
137.	தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு	கடலங்குடி நடேச சாஸ்திரி
138.	திருக்காவலூர்க் கோவில்	ரா.பி. சேதுப் பிள்ளை
139.	தாயுமானவர் வரலாறு	கா. சுப்பிரமணிய பிள்ளை
140.	திருத்தணிகை வெண்பா வந்தாதி	நீ. சண்முகானந்த சுவாமி
141.	மதுரைச் சொக்கநாதர் உலா	புராணத்திருமலைநாதர்
142.	பழனிப் பிள்ளைத் தமிழ்	சின்னப்பநாயக்கர்
143	ஒருபாவொருபது	ச கந்தைய பிள்ளை
144.	திருநரசிங்கர்மாலை	ரெ. திருமலை ஐயங்கார்
145.	,,	,,

146.	மயிலாசலமாலை	பு. அ. பொன்னுசாமிப் பிள்ளை
147.	,,	,,
148.	,,	,,
149.	பிரார்த்தனை	வீரசிவசுப்ரமணியம்
150.	,,	,,
151	ஆத்மபோதம்	மின்னூருத்தின்
152.	,,	,,
153.	மாதவச் சிவஞான யோகிகள்	திருவாவடுதுறையாதீனவெளியீடு
154.	,,	,,
155.	கந்தரநுபூதி மூலமும் உரையும்	அருணகிரிநாதர்
156.	கூடல்மான்மியம்	நா. அப்பனையங்கார்
157.	திருக்காளத்தி நாதருலா	சேறைக் கவிராச பிள்ளை
158.	நீதிநெறிக் கும்மி	சி. ப. திரவிய நாடார்
159.	தொண்டர் மாலை	திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கம்
160.	சரஸ்வதி கண்டாபுராணம்	போஜ தேவன்
161.	சந்தான குரவர் நான்மணிமாலை	திருவாவடுதுறை ஆதீன வெளியீடு
162.	விநாயகர் அகவல்	ஔவையார்
163.	தடாதகைப்பிராட்டியார் திருமண வெண்பாமாலை	ச. வெ. சன்மா
164.	முருகக்கடவுண்மீது திருவருண்மாலை	சுந்தரபாண்டிய ஓதுவார்

165.	முருகன் பிள்ளைத் தமிழ் மூலபாடம்	வரகவி. மார்க்கசகாயதேவர்
166.	ராம தூதன்	இ. கோபாலகிருஷ்ணஐயர்
167.	பிரமாநந்தசுவாமிகளின் தோத்திரப்பா	சரவண சுவாமிகள்
168	மயிலாசலக்கலம்பகம்	தண்டபாணி சுவாமிகள்
169.	சைவசமயசாரம்	சு. சிவபாதசுந்தரம்
170.	சுவாமி விவேகாநந்தா தமிழ்மொழிபெயர்பு	எம். எஸ். நடேசன்
171.	அதர்வசிரோப நிடதம் வடமொழி-தமிழ்	கு. சீனிவாச தீக்ஷிதர்
172.	ராதாசுவாமி மத தர்சனம் தமிழ் மொழிபெயர்ப்பு	மொ. பெ. ராதாசுவாமி
173.	சப்தரிஷி ராமாயணம்	மதுரை தொ. ரா. பத்மநாபஐயர்
174.	திருத்தணிகைப் புராணம் கடவுள் வாழ்த்தும்	கச்சியப்ப முனிவர்
175.	திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	பகழிக்கூத்தர்
176.	உவமான விளக்கம்	இராமசுப்பிரமணிய நாவலர்
177.	ஆசிரியர் துதிப்பாக் கோவை	வே. முத்துசாமி ஐயர்
178.	கலங்காதகண்ட விநாயகர் விண்ணப்பமாலை	சிதம்பரஞ் செட்டியார்
179.	சுப்பிரமணியக் கடவுள் க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ்	காஞ்சிபுரம் சிதம்பர முனிவர்
180.	பிரம்மோபநிடதம்	ப. ஆ. சீனிவாச தீட்சிதர்
181.	திருக்களிற்றுப்படியார் விளக்கக் கட்டுரை	உய்யவந்ததேவநாயனார்
182.	,,	,,